விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, வைகாசி - 16 ஞாயிறு 30.05.2021 மலர் - 2, இதழ் - 54

# மமதாவுக்கு வலுக்கும் எதிர்ப்பு

மேற்கு வங்கம், ஒடிசாவை தாக்கிய யாஸ் புயலால் ஏற்பட்ட சேதத்தை மதிப்பிடுவதற்காக பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் மேற்கு வங்கம் மேற்கு மிட்னாபூர் மாவட்டத்தில் உள்ள கலைகுண்டா விமான தளத்தில் நடைபெற்ற மறுஆய்வுக் கூட்டத்தில் மமதா கலந்து கொள்ளவில்லை. மோடியை அரை மணிநேரம் காக்கவைத்து தாமதமாக சென்றதோடு, அவர் ஒரு அறிக்கையை சமர்ப்பித்துவிட்டுகூட்டத்தில் இருந்து உடனடியாக வெளியேறினார்.இதனால், பலத்த விமர்சனத்துக்கு உள்ளாகியிருக்கிறார் மமதா.

இது குறித்து கருத்து தெரிவித்த மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா, 'யாஸ் சூறாவளி மக்களை பாதித்துள்ளது, பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதே காலத்தின் தேவை. துரதிர்ஷ்டவசமாக, மமதா பானர்ஜி பொது நலனுக்கு மேலாக தனது ஆணவத்தை வைத்துள்ளார்.இன்றைய நடத்தை அதை பிரதிபலிக்கிறது' என கூறியுள்ளார்.

பா.ஜ.க சட்டமன்ற எதிர்கட்சித் தலைவர் சுவேந்து அதிகாரி, 'மமதா பானர்ஜி, மேற்கு வங்க மக்களின் துன்பங்கள் குறித்து அறியும் உணர்ச்சியற்றவர் என்பதை மீண்டும் ஒரு முறை காட்டியுள்ளார்.கூட்டாட்சி நெறிமுறைகளில் இன்று ஒரு இருண்ட நாள்.அரசியலுக்கு ஒரு காலமும் ஆட்சிக்கு ஒரு காலமும் உள்ளது. மமதாவால் அதை புரிந்து கொள்ள முடியாது' என்றுகூறினார். இதனைத் தவிர பொதுமக்கள் பலரும்கூட மமதாவின் செயலுக்கு கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், நம் தேசம் சீன தொற்றுடன் போராடிக்கொண்டுள்ளது. மாநிலம் புயலால் பாதிக்கப்பட்டு இருந்தாலும் இக்கணத்தில் நிவாரணம் கோருவது உகந்தது அல்ல. எங்கள் மாநில நிதியை வைத்து நிலைமையை கையாள முயற்சிப்போம் என ஒடிசா முதல்வர் நவீன் பட் நாயக் தெரிவித்துள்ளார்.



# பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு நிவாரணம்

**கொ**ரோனாவால் பெற்றோரை இழந்த குழந்தைகளின் பெயரில் தலா ரூ.5 லட்சம் வைப்பு நிதி, குழந்தையின் 18 வயது பூர்த்தியான பிறகு அந்த பணத்தை வட்டியோடு சேர்த்து எடுத்துக் கொள்ளலாம். அரசின் இல்லங்கள், விடுதிகளில் தங்க முன்னுரிமை.கல்விக் கட்டணத்தை அரசே ஏற்கும்.கொரோனாவால் தாய் அல்லது தந்தையை இழந்த குழந்தைகளில் தந்தை அல்லது தாய்க்கு ரூ.3 லட்சம்.பெற்றோரை இழந்து உறவினர் ஆதரவில் வளரும் குழந்தைகளுக்கு பராமரிப்புச் செலவாக மாதம் தோறும் ரூ.3,000 உதவிதொகை.உள்ளிட்ட அறிவிப்புகளை தமிழக முதல்வர் ஸ்டாலின் அறிவித்துள்ளார்.




# பத்திரிகையாளர்களை ஒருமையில் பேசிய பொன்முடி

**வி**ழுப்புரம் மாவட்டம், திருவெண்ணெய்நல்லூரில் உள்ள மேலமங்கலம் கிராமத்தில் கொரோனா தடுப்பூசி முகாமை தொடங்கி வைக்க சென்றார் உயர் கல்வித்துறை அமைச்சர் க.பொன்முடி. அவரை, அப்பகுதியை சேர்ந்த செய்தியாளர்கள் ஒன்று சேர்ந்து சந்தித்து, முதல்வர் ஸ்டாலின் அறிவித்த செய்தியாளர்களுக்கான ரூ 5 ஆயிரம் சிறப்பு ஊக்கத்தொகையை, தாலுக்கா பத்திரிகையாளர்களுக்கும் வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி கோரிக்கை மனு அளித்தனர்.அப்போது மனுவை கையில் வாங்காமல் செய்தியாளர்களை பார்த்து "யோவ் உங்களால்தான் கொரோனா பரவுகிறது, கிராமத்தில் வசிக்கும் செய்தியாளர்களுக்கு பணம் கொடுப்பார்களா?தளபதி சொன்னது மாவட்ட செய்தியாளர்களுக்கு மட்டும்தான் போ" என்று ஒருமையில் பேசினார்.அமைச்சரின் இந்த அநாகரீகப் பேச்சால் அங்கிருந்த அனைவரும் திகைத்தனர்.



முதலமைச்சராக பதவி ஏற்றதும் பத்திரிக்கையாளர்களை முன்களப் பணியாளர்களாக அறிவித்த ஸ்டாலின் தற்போது இப்படி பேசியுள்ள அமைச்சர் பொன்முடி மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பத்திரிகையாளர்கள் கோரிக்கை வைத்துள்ளனர். இந்நிலையில், தன்னுடைய பேச்சுக்கு வருத்தம் தெரிவித்துள்ளார் பொன்முடி.

# தரப்படாத விருதை திருப்பியளித்தார் வைரமுத்து

கேரள மாநிலத்தின் பெருமை மிக்க விருதுகளில் ஒன்றான ஓ.என்.வி விருதுக்கு வைரமுத்துவின் பெயர்பரிந்துரைக்கப்பட்டது. பாலியல் புகாரில் சிக்கிய அவருக்கு விருது தரப்படுவதை பலர் எதிர்த்தனர்.இதனால், விருது மறுபரிசீலனை செய்யப்படுவதாக ஓ.என்.வி அமைப்பு அறிவித்தது. எப்படியும் விருது கிடைக்காது என தெரிந்து, வைரமுத்து அறிக்கை வெளியிட்டுள்ளார்.அதில், அவ்விருதை திருப்பி அளிப்பதாகவும் அதற்குத் தரப்படும் 3 லட்சம் ரூபாயை கேரள முதல்வரின் நிவாரண நிதியில் சேர்த்து விடும்படியும் கூறியுள்ளார். ஆனால்,' தனக்கு அளிக்கப்படாத விருதை வைரமுத்து எப்படி திருப்பி கொடுத்தார் என்பதுதான் புரியவில்லை' என இணையதளவாசிகள் கிண்டல் செய்து வருகின்றனர்.



# மண்டபத்தை விற்ற அறநிலையத் துறையினர்



காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் ரோடு கீரை மண்டபம் அருகில் ஹிந்து அறநிலையத்துறைக்கு உட்பட்ட பணாமுடீஸ்வரர் கோயில் வாகன கல்மண்டபத்தை வேலியே பயிரை மேய்வது போல் ஹிந்து அறநிலையத்துறையில் வேலை பார்க்கும் சில பணியாளரால் பல லட்ச ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. அந்த இடத்தை வாங்கியவர் கட்டடம் கட்டியதை தடுத்து ஆக்கிரமிப்பை அதிகாரிகள் மூலம் அகற்ற வைத்தது ஹிந்து முன்னணி இயக்கம்.

# பிரபல தனியார் வங்கிக்கு அபராதம்

பிரபல தனியார் வங்கியான எச்.டி.எஃப்.சி வங்கியின் வாகன கடன் இலாகாவில் நடைபெற்ற முறைகேடுகள் தொடர்பாக ரிசர்வ் வங்கிக்கு புகார்கள் வந்தன். அதன் அடிப்படையில் விசாரித்த இந்திய ரிசர்வ் வங்கி, எச்.டி.எஃப்.சிவங்கியின் வாடிக்கையாளர்களுக்கு மூன்றாம் தரப்பு நிதி சாராத பொருட்களை விற்பனை செய்தல் மற்றும் வங்கி ஒழுங்குமுறைச் சட்டம், 1949 (சட்டம்) இன் பிரிவு 6 (2) மற்றும் பிரிவு 8 ன் விதிகளை மீறியதற்காக ரூ.10 கோடி அபராதம் விதித்துள்ளது.




# சுங்கச்சாவடியில் காத்திருந்தால் கட்டணமில்லை

நாடு முழுவதும் தேசிய நெடுஞ்சாலைகளில் நான்கு சக்கர வாகனங்களுக்கு ‘பாஸ்ட் டேக்’ முறை கட்டாயமாக்கப்பட்டுள்ளது. ஏறக்குறைய அனைத்து வாகனங்களும் இம்முறைக்கு மாறிவிட்டன. இதனால் சுங்கச்சாவடிகளில் காகிதமில்லா பணப்பரிவர்த்தனை அதிகரித்துள்ளது.தற்போது, சுங்கச்சாவடிகளில் வாகனங்கள் நீண்ட நேரம் காத்திருப்பை தவிர்க்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.அதன்படி சுங்கச்சாவடிகளில் பணம் செலுத்தும் இடத்தில் இருந்து 100 மீட்டர் தொலைவினை குறிக்கும் வகையில் மஞ்சள் நிற கோடு வரையப்படும்.இக்கோட்டினை தாண்டி வாகனங்கள் வரிசையில் நின்றிருந்தால் அந்த குறிப்பிட்ட வாகனங்கள் சுங்கச்சாவடிகளில் கட்டணம் செலுத்தாமல் கடந்து செல்லலாம். சுங்கச்சாவடிகளில் பணம் செலுத்தும் இடத்தில் 10 வினாடிகளுக்கு மேல் ஒரு வாகனம் நிற்கக்கூடாது என்பதற்காக இந்த புதிய விதிகள் விரைவில் நடைமுறைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



# கூகுளின் தவறான மொழிப்பெயர்ப்பு

கூகுள் மொழி பெயர்ப்பில், மலையாளத்தில் பெரிய எழுத்துக்களில் GOD (கடவுள்) என்ற சொல்மொழிப யெர்க்கப்படும்போது, அது ‘அல்லாஹு’ என்றுக் காட்டுகிறது. ஆனால், சிறிய எழுத்துகளில் god என்று மொழிபெயர்க்கப்படும்போது, அது, ‘தெய்வம்’ என்றுக் காட்டுகிறது. இதனால், இதை போன்று தவறாக, ஒரு மதம் சார்ந்த வகையில் மொழி பெயர்க்கும் கூகுள் மீது உடனடியாக அரசு நடவடிக்கை எடுக்கவும், இது போன்ற மொழிபெயர்ப்புகளை அறிந்து உடனடியாக மாற்றவும் நெட்டிசன்கள் கோரிக்கை வைத்து வருகின்றனர். இதற்கு முன்னதாக, கூகுள் மொழிபெயர்ப்பில் ஹிந்தியில் ‘கடவுள் உங்களை ஆசீர்வதிப்பார்’ என்று மொழிபெயர்த்தபோது அது, 'அஸ்ஸலாமு அலைக்கம்' என்று தவறாக மொழிபெயர்க்கப்பட்ட ஒரு சம்பவம் நிகழ்ந்தது. உண்மையில், ‘அசலாமு அலைக்கம்’ என்ற அரபு வார்த்தைக்கு “உங்களுக்கு அமைதி கிடைக்கும்” என்பதே பொருள்.முஸ்லீம் அறிஞர்களின் கூற்றுப்படி, இது ஹதீஸின்படி செய்யப்படுகிறது. ஆர்கனைசர்வாராந்திர பத்திரிகை இந்த தவறை சுட்டிக்காட்டியதைத் தொடர்ந்து, கூகுள் அந்த மொழிபெயர்ப்பை ‘பகவன் ஆப்கா பலா கரே’ என்று ஹிந்தியில் மாற்றியது.இதைப் போன்ற தவறான மொழி பெயர்ப்பு குறித்து மக்கள் கூகுளுக்கு உடனடியாக ஆட்சேபனை தெரிவிக்க வேண்டும்.மேலும், 'ஆத்ம நிர்பர் பாரத் அபியான்' திட்டத்தின் கீழ் நமது பாரதத்திற்கென ஒரு பிரத்யேக தேடுபொறியை உருவாக்க மத்திய அரசும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.



# எது வெறுப்புப் பேச்சு




வெறுக்கத்தக்க பேச்சு (Hate Speech) என்றால் என்ன என்பதற்கான விரிவான வரையறையை மத்திய உள்துறை அமைச்சகம் விரைவில் வெளியிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.இதற்காக உள்துறை அமைச்சகம் ஒரு குழுவை ஏற்படுத்தியுள்ளது.இக்குழு விரைவில் அறிக்கையை அமைச்சகத்துக்கு சமர்ப்பிக்கும். இது குறித்து பேசிய டெல்லி தேசிய சட்ட பல்கலைக்கழகத்தின் குற்றவியல் மையத்தின் தலைவரும், இக்குழுவின் உறுப்பினர்களில் ஒருவருமான ஜி எஸ் பாஜ்பை "வெறுக்கத்தக்க பேச்சு என்பது எது, இதை யார் தீர்மானிப்பார்கள்? எந்தவொரு பேச்சு, வன்முறை அல்லது சட்டம் ஒழுங்கை சீர்குலைக்க வழிவகுக்குமோ எதுவே 'வெறுக்கத்தக்க பேச்சு' என்று பொருள்படும்.வெறுமனே ஒருவரை விமர்சிப்பது வெறுக்கத்தக்க பேச்சு அல்ல." என தெரிவித்தார். முன்னதாக, டிஜிட்டல், சமூக வலைத்தளங்களில், வெறுப்புணர்வு தூண்டும் வார்த்தைக்கான தெளிவான, விரிவான ஒரு வரையறை இல்லாததால், குற்றவாளிகளைக் கண்டறிந்து வழக்குத் தொடுப்பது விசாரணை அமைப்புகளுக்கு கடினமான பணியாக உள்ளது. இதற்காக இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது என கூறப்படுகிறது.



# வெளிநாடு வாழ் ஹிந்துக்களுக்கு குடியுரிமை

ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் பாகிஸ்தானைச் சேர்ந்த துன்புறுத்தப்பட்ட ஹிந்துக்கள், சீக்கியர்கள், சமணர்கள், பார்சிகள், பௌத்தர்கள் மற்றும் ஏற்கனவே இங்கு அகதிகளாக வந்து 12 வருடங்களுக்குமேல் குஜராத், ராஜஸ்தான், சத்தீஸ்கர், ஹரியானா மற்றும் பஞ்சாபில் 13 மாவட்டங்களில் வசிக்கும் ஹிந்து சிறுபான்மையினர்களுக்கு இந்திய குடியுரிமை வழங்க மோடி அரசு விண்ணப்பங்களை வரவேற்றுள்ளது. இந்த மூன்று அண்டை நாடுகளைச் சேர்ந்த, முஸ்லீம் அல்லாத சிறுபான்மையினருக்கு குடியுரிமை வழங்குவதற்காக 2019ம் ஆண்டில் குடியுரிமை திருத்தச் சட்டத்தை (சி.ஏ.ஏ) மத்திய அரசு நிறைவேற்றியிருந்தாலும், இன்னும் அதற்கான முழுமையான விதிகளை வகுக்கவில்லை. இந்த அறிவிப்பு சி.ஏ.ஏவுடன் எந்த வகையிலும் இணைக்கப்படவில்லை.குடியுரிமைச் சட்டம், 1955 / 57 / 16ன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தியே மத்திய அரசு இதனை செயல்படுத்துகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பட்டியலினத்தவர் அடித்துக் கொலை

டெல்லியின் கல்யாண்புரி, பகுதியை சேர்ந்த பட்டியல் சாதி சமூகத்தைச் சேர்ந்தவர் 17 வயது ஹிந்து சிறுவன் கோபால். இவர், சில நாட்களுக்கு முன், டெல்லியின் கல்யாண்புரியில் ஒரு மசூதி முன்பாக போராட்டத்தில் கலந்துகொண்டுள்ளார். இதனால் அப்பகுதியை சேர்ந்த முஸ்லிம்கள் அவரை மிரட்டியதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், 'கடந்த மே 4 அன்று மாலை 3:00 மணிக்கு அந்த முஸ்லீம் கும்பல் எனது பேரன் கோபாலை அழைத்துச் சென்றனர். இரவு நீண்ட நேரமாகியும் அவன் வீடு திரும்பவில்லை. நாங்கள் அவனைத் தேடினோம்.நாங்கள் காவல் நிலையத்தில் புகாரளிக்கச் சென்றோம், ஆனால் யாரும் எங்கள் புகாரைக் கேட்கத் தயாராக இல்லை, இதற்காக காவலர்கள் கொரோனாவை சாக்கு கூறினர். பின்னர் நாங்கள் ஒரு உள்ளூர் கால்வாயின் அருகே அவனது உடைகள், செருப்புகளைக் கண்டோம்; கால்வாயில் மூழ்கி அடித்துச்சென்ற ஒரு சிறுவனைப் பற்றி ஒரு சிலர் எங்களிடம் சொன்னார்கள். கோபால் எந்த சண்டையிலும் ஈடுபடவில்லை; முஸ்லீம் கும்பல் அவனை ஏன் கொன்றது என்பது எங்களுக்குத் தெரியாது' என கோபாலின் பாட்டி கமல்வதி கூறியுள்ளார்.

முகமது ஆலிம்தான் பிரதான குற்றவாளி அவனுடன் ஃபெரோஸ் கான், யூசுப் கான் இணைந்தே இக்கொலையை செய்துள்ளனர்.அவர்கள், இன்னும் எங்களுக்கு கொலை மிரட்டல் விடுக்கின்றனர் என்று கோபாலின் சகோதரர் குற்றம் சாட்டியுள்ளார்.'கோபாலின் சடலம் இன்னும் மீட்கப்படவில்லை, தேடிக்கொண்டுள்ளோம்.அதுவரை இது ஒரு காணாமல் போன வழக்குதான்' என்று காவல்துறை தெரிவிக்கிறது. இதற்கிடையே கோபாலின் குடும்பத்தை ஆதரிக்கும் முஸ்லீம் பெண்களையும் 'அவர்களை ஆதரித்தால் நாங்கள் உங்கள் குழந்தைகளையும் கொன்றுவிடுவோம்' என அப்பகுதி முஸ்லீம் ஆண்கள் அச்சுறுத்தி வருகின்றனர்.

சில வாரங்களுக்கு முன்பு, டெல்லியில், ஒரு ஹிந்து ஆணுக்கும் ஒரு முஸ்லீம் பெண்ணுக்கும் இடையிலான திருமணத்தைத் தொடர்ந்து, டெல்லியின் சாராய் காலே கானில் முஸ்லிம்களின் கும்பல் ஒன்று, பட்டியலினத்தவர்கள் வாழும் பகுதியில் கலவரத்தில் ஈடுபட்டது. அந்த கும்பல் மணமகன் வீட்டைத் தாக்கி தீ வைக்கவும் முயன்றது குறிப்பிடத்தக்கது.



# கேரள அரசுக்கு உயர்நீதிமன்றம் குட்டு

சிறுபான்மையினருக்கான உதவித்தொகையை முஸ்லிம்களுக்கு 80 சதவீதம், லத்தீன் கத்தோலிக்கர்கள், மதம் மாறிய கிறிஸ்தவர்களுக்கு 20 சதவீதம் என்ற விகிதத்தில் வழங்க கேரள கம்யூனிச அரசு வழங்குகிறது. கேரள அரசின் இந்த உத்தரவை ரத்து செய்யக் கோரி ஜஸ்டின் பல்லிவதக்கல் மனு கேரள உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். அம்மனுவில், "சிறுபான்மை சமூகங்களை ஊக்குவிக்கும் போர்வையில் கேரள அரசு, முஸ்லிம்களுக்கு ஆதரவாகவும் மற்ற சிறுபான்மை சமூகங்களுக்கு தீங்கு விளைவிக்கும் வகையிலும் செயல்படுகிறது. லத்தீன் கத்தோலிக்க மற்றும் மதம் மாறிய கிறிஸ்தவர்களைத் தவிர, மற்ற கிறிஸ்தவ சமூகத்திற்கு இதனால் எந்த நன்மையும் கிடைப்பதில்லை' என கூறப்பட்டிருந்தது. இதனை விசாரித்த நீதிபதி ஷாஜி பி சாலி, தலைமை நீதிபதி மணிகுமார் ஆகியோர் அடங்கிய டிவிஷன் பெஞ்ச், 'இது அரசியலமைப்பிற்கு விரோதமானது, சிறுபான்மை சமூக உறுப்பினர்களுக்கு சமமாக தகுதியும் உதவித்தொகையும் வழங்கத் தேவையான நடவடிக்கைகளை மாநில அரசு எடுக்க வேண்டும்' என உத்தரவிட்டது.




---




# அமுலை குறிவைக்கும் பீட்டா

விலங்கு நல அமைப்பான பீட்டா, மறைமுக இஸ்லாமிய பிரச்சார அமைப்பாக செயல்படுவதாக குற்றச்சாட்டு வைக்கப்பட்டு வருகிறது. கடந்த பல நாட்களாக கூட்டுறவு பால் நிறுவனமான அமுலை குறி வைத்து, மாட்டு பாலில் இருந்து தாவர அடிப்படையிலான தயாரிப்புகளுக்கு மாறுமாறு நிர்பந்தித்து வருகிறது. மேலும் இதற்காக இந்திய விளம்பர தர நிர்ணய கவுன்சிலில் (ஏ.எஸ்.சி.ஐ) வழக்குத் தொடர்வது, கடிதம், கட்டுரைகள் எழுதுவது, தவறான தகவல்களை சமூக ஊடகங்களில் பரப்புவது என தொடர்ந்து செயல்பட்டு வந்தது. அவர்களின் கடிதத்துக்கு பதில் அளித்துள்ள அமுல் பொருட்களை தயாரிக்கும் அமுல் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் ஆர். எஸ்.சோதி, 'நிறுவனம் பால் பயன்படுத்துவதை நிறுத்தினால், கூட்டுறவு பால் துறையை நம்பியுள்ள 10 கோடி மக்களுக்கு யார் வேலை வழங்குவார்கள்? பீட்டா, இந்த பால் விவசாயிகளுக்கு வாழ்வாதாரத்தை வழங்குமா?அவர்களில் 70 சதவீதம் பேர் நிலமற்றவர்கள்.அவர்களின் குழந்தைகள் பள்ளி கட்டணத்தை யார் செலுத்துவார்கள்?' என்று கேள்வி கேட்டுள்ளார். முன்னதாக, அமுலுக்கு எதிராக பீட்டா மற்றும் வேறு இரண்டு அமைப்புகள் தாக்கல் செய்த மனுவை இந்திய விளம்பர தர நிர்ணய கவுன்சில் (ஏ.எஸ்.சி.ஐ) தள்ளுபடி செய்தது குறிப்பிடத்தக்கது.

# கிறிஸ்தவர்களை குழப்பும் சுவிசேஷர்கள்




உத்தர பிரதேசம், பிரயாக்ராஜின் நைனியில் உள்ள 'சாம் ஹிகின்போட்டம் வேளாண்மை, தொழில்நுட்பம் மற்றும் அறிவியல் பல்கலைக்கழகத்தின்' (SHUATS) துணைவேந்தரும் கிறிஸ்தவ சுவிசேஷகருமான பேராசிரியர் ராஜேந்திர பிஹாரி லால், கொரோனா தொற்றுநோய் குறித்து தவறான அறிக்கைகளையும் செய்திகளையும் வீடியோ சமூக ஊடகங்களில் வெளியிட்டு அவரை பின்பற்றுபவர்களில் அறியாமையை பயன்படுத்தி தவறான நம்பிக்கையை ஊக்குவித்து வருகிறார்.

சமீபத்தில், ஒரு கூட்டத்தில் உரையாற்றிய பிஹாரி லால், ஹிந்துக்களை ஏமாற்ற ஹிந்து துறவிகளை போல, கழுத்தில் ருத்ராட்ச மாலை, காவி உடை அணிந்து, 'ஏசுவின் பெயரில், கொரோனா வைரஸை விட்டு வெளியேறுமாறு கட்டளையிடுகிறேன். ஏசுவின் பெயரால், நாங்கள் தொற்றுநோயைத் சபிக்கிறோம், அதை உடனே முடிக்குமாறு கோருகிறோம்.உங்கள் அதிகாரத்தை நாங்கள் ரத்து செய்கிறோம்.ஏசுவின் பெயரால், நீங்கள் எங்கிருந்து வந்தீர்களோ நாங்கள் உங்களை அங்கே அனுப்புகிறோம்.இன்றும் இந்த தருணமும், இந்த நேரத்திலிருந்தே, இந்த தீயசக்தி நாட்டை விட்டு வெளியேறும்" என்று பேசியுள்ளார்.

இவர் இதுபோன்ற பல வீடியோக்களை தனது யூடியூப் சேனலில் பதிவேற்றியுள்ளார். ஆனால், இப்படி 400 க்கும் மேற்பட்ட வீடியோக்களில் தோன்றியுள்ள இவர், ஆக்சிஸ் வங்கி கணக்குகளில் சட்டவிரோத பணப்பறிமாற்றம், பணமதிப்பிழப்பு தொடர்பான மோசடி மற்றும் குற்றவியல் சதித்திட்டங்களில் சம்பந்தப்பட்டவர் என்பதும் இக்காரணங்களால் 2019ல் சிறைக்கு சென்றவர் என்பதும் பலருக்கும் தெரியாது.

இதேபோல, தமிழகத்தை சேர்ந்த 'ஏஞ்சல் டிவி'யின் நிர்வாகியான கிறிஸ்தவ சுவிசேஷகர் சுந்தர் செல்வராஜ், தனது சேனலைப் பயன்படுத்தி 'கொரோனா தடுப்பூசியில் மைக்ரோ சிப் உள்ளது. தடுப்பூசியில் இருந்து தப்பித்துக்கொள்ளுங்கள், அது சாத்தானின் அடையாளம் 'என கூறி கொரோனா தடுப்பூசிக்கு எதிராக தவறான பிரச்சாரங்களை முன்வைத்தார் என்பதும் நினைவு கூரத்தக்கது.

# வித்தியாசமான செய்தி வாசிப்பாளர்



கன்னட தொலைக்காட்சியான TV5ல் செய்தி வாசிப்பவர் ஸ்ரீலட்சுமி. பிரதமர் நரேந்திர மோதிக்கு எதிராக செய்திகளைதினசரி சொல்ல வேண்டும் என்று இவரை நிர்பந்தப்படுத்தியது தொலைக்காட்சி நிர்வாகம். இந்த தொடர் வற்புறுத்தியதால் அவ்வேலையை உதறித் தள்ளினார் ஸ்ரீலட்சுமி.நீங்கள் வழங்கும் ஊதியம் இல்லையென்றாலும் கோயில்களில் வழங்கப்படும் பிரசாதத்தை ஏற்று வாழ்வேன் என்று தெரிவித்துள்ளார் இந்த வீரமங்கை.

# சீனாவாக உருமாறும் இலங்கை

சீனாவிடம் வரம்பில்லாமல் பெற்ற கடனுக்கான வட்டியையும், அசலையும் திரும்பச் செலுத்த முடியாமல் அதன் கடன் வலையில் இலங்கை வசமாக சிக்கியுள்ளது.தற்போது மீண்டும் 1.4 பில்லியன் டாலர் கடனில் சிறப்புப் பொருளாதார நகரத்தை உருவாக்கி அதை சீனாவிடம் ஒப்படைக்க உள்ளது இலங்கை. சிறப்புப் பொருளாதார மண்டலமாக சுமார் 600 ஏக்கர் பரப்பில் உருவாக்கப்படும் இந்த கொழும்பு துறைமுக நகர மசோதா, இலங்கை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. சீனாவுக்கு 99 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு வழங்கப்படும் இந்தப் பகுதியில் இலங்கை அரசின் கட்டுப்பாடு இல்லாமல் அனைத்து முடிவுகளை எடுக்கும்உரிமையும் சீனாவுக்கு வழங்க இலங்கை முடிவெடுத்துள்ளது. இதனால் 'சீன மாகாண மசோதா' என, அந்நாட்டு எதிர்க்கட்சிகள் இதனை விமர்சித்து வருவதுடன் கடும் எதிர்ப்பும் தெரிவித்துள்ளன.ஏற்கனவே, 'சீனாவிடம் 2,000 மில்லியன் அமெரிக்க டாலர் கடன் பெற்று உருவாக்கிய அம்பாந்தோட்டை துறைமுகத்தை 99 ஆண்டுகளுக்கு சீனாவுக்கே தாரைவார்த்துவிட்டது இலங்கை என்பது குறிப்பிடத்தக்கது.



# சேவைத்துளிகள்

1. ஹாங்காங்கை சேர்ந்த விஷ்வ ஹிந்து பரிஷத் அமைப்பினர் தமிழகத்திற்கு இரண்டு ஆக்ஸிஜன் செறிவூட்டிகளை விமானம் மூலமாக தமிழகம் அனுப்பியுள்ளனர். தமிழக விஷ்வ ஹிந்து பரிஷத் அதனை, விருதுநகர் மாவட்டத்திற்கு ஒதுக்கியுள்ளது.





2. ஆர்.எஸ்.எஸ், சேவாபாரதி தமிழ்நாடு சேலம் சார்பாக மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு கட்டில் படுக்கை தலையணை போன்றவை 25 செட்கள், ஆக்ஸிஜன் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

3. விசுவ ஹிந்து பரிஷத் வடதமிழகம் சார்பில் ஆக்ஸிஜன் செறிவூட்டிகள் வடசென்னை, தென்சென்னை, செங்கல்பட்டு மாவட்டங்களில் கொரானா சேவைக்காக வழங்கப்பட்டது.



# புத்திசாலி



காட்டில் ஒரு சிங்கம் ஒரு ஆட்டை அழைத்தது.''என் வாய் நாறுகிறதா என்று பார்த்துச் சொல்,''என்று கேட்டது. ஆடு முகர்ந்து பார்த்துவிட்டு,'ஆமாம்,நாறுகிறது.'என்று சொல்லிற்று. உடனே சிங்கம்,''முட்டாளே,உனக்கு எவ்வளவு திமிர்,''என்று கூறி அதன் மீது பாய்ந்து குதறியது.

அடுத்து சிங்கம் ஒரு ஓநாயை அழைத்து .அதனுடைய கருத்தைக் கேட்டது.ஓநாய்முகர்ந்து பார்த்துவிட்டு, ''கொஞ்சம் கூட நாறவில்லை,''என்றது. சிங்கம்,''மூடனே,பொய்யா சொல்கிறாய்?''என்று கூறி அடித்துக் கொன்றது.

பின்னர் ஒரு நரியை அழைத்து அதே கேள்வியைக் கேட்டது. நரி சொன்னது, ''நாலு நாளா கடுமையான ஜலதோஷம்.அதனால் எனக்கு ஒரு வாசனையும் தெரியவில்லை.''சிங்கம் நரியை விட்டுவிட்டது.

புத்திசாலிகள் ஆபத்துக் காலத்தில் வாயைத் திறக்க மாட்டார்கள்.

# அச்சமின்மை



அக்பரிடம் ஓர் அறிவாளி சவால் விட்டார்.

“என் வேலைக்காரன் பெருந்தீனிக்காரன்! அவனை ஒரு மாதம் வைத்திருந்து ஊட்டச் சத்துமிக்க உணவு களைக் கொடுங்கள். அவன் வேலையோ உடற்பயிற்சியோ செய்யக்கூடாது. ஆனால் ஒரு கிலோகூட எடை கூடக்கூடாது!” பீர்பால் அரசர் சார்பாக அந்த சவாலை ஏற்றார்

மூன்று வேளைகளும் மகத்தான விருந்து படைக்கப்பட்டது. மாதக்கடைசியில் எடையும் அப்படியே இருந்தது.அக்பருக்கு ஆச்சரியம்.பீர்பால் சொன்னார், “அவனுடைய இரவுப்படுக்கையை சிங்கக்கூண்டுக்கு அருகே அமைத்தேன்.கூண்டின் பூட்டு சரியாக இல்லை என்று சொன்னேன்.அச்சம் காரணமாய் ஊட்டச்சத்து உடலில் ஒட்டவில்லை.”

அச்சமின்மையே ஆரோக்கியம்!

# பரதன் பதில்

*சமீபத்தில் வெளியான பள்ளிகளில் பாலியல் தொல்லைகள் குறித்தான இரண்டு செய்திகளுக்கும் என்ன வித்தியாசம்?*

**- ரா. சிவராமன், திருவாரூர்**

பெயர்தான் வித்தியாசம்.பத்மா சேஷாத்திரி பள்ளி என வெளிப்படையாக சொன்ன ஊடகங்கள், செயின்ட் ஜோசப் அகாடமி என கூறாமல் தனியார் அகாடமி என்றுதானே தெரிவித்தன.